OS.No. 301/2020 – 12.02.2025

DW1 – ராமகவுண்டன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரியும், கிரய முன்தொகையை திருப்பி தரக்கோரியும் தாக்கல் செய்யபப்பட்டுள்ளது. ஆனால் நான் கிரய முன்தொகை எதுவும் பெறவில்லை. கடனாதாகதான் பணம் பெற்றேன். 1ம் வாதி எனக்கு உறவினர் என்றால் இல்லை, ஆனால் பழக்கம். எத்தனை வருடமாக அவரிடம் வரவு செலவு செய்து வருகிறேன் என்றால் 2011ம் ஆண்டு முதல் வரவு செலவு வைத்துள்ளேன். 1ம் வாதியிடம் நான் செலுத்திய பணத்திற்கு நான் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வட்டி மட்டும் கையில் வாங்கிக்கொள்வார். அவர் ரசீது எதுவும் கொடுக்கவில்லை.

நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 ஆவணத்தில் வட்டி செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் யாரும் அவ்வாறு தரமாட்டார்கள். இந்த ஆவணம் எதற்காக எழுதப்பட்டது, அதில் யார் யார் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் நான் மட்டும்தான்

கையெழுத்து செய்துள்ளேன். இந்த ஆவணம் நான் வாங்கிய கடனுக்காக எழுதிக்கொடுத்தேன். இந்த ஆவணத்தில் கண்ட கடனை நான் திருப்பி செலுத்தவில்லை என்றால் சரி. வட்டி மட்டும்தான் கொடுத்துள்ளேன். உண்மையிலேயே கடனுக்காக பத்திரம் எழுதப்பட்டிருந்தால் அசல் ஆவணம் கடன் கொடுத்தவரிடம்தான் இருக்கும் என்றால் சரி. அந்த கடன் தொகைக்காக காட்டை எழுதி கேட்டார்கள். நான் காட்டை எழுதி கொடுத்து ரூ.20 பத்திரத்தை நான் திரும்ப பெற்றுக்கொண்டேன். அவ்வாறு ரூ.20 பத்திரத்தை நான் திரும்ப பெற்றுக்கொண்டேன் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பி.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 முதல் 3 ஆவணம் உண்மையிலேயே 1ம் வாதிக்கு கடனுக்காக எழுதப்பட்டிருந்தால் 1ம் வாதியும் கையொப்பம் செய்திருப்பார் என்றும் சாட்சிகளும் கையெழுத்து செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. ஏன் மேற்படி அவ்வாறு பத்திரத்தில் என்னிடம் கையெழுத்து பெறவில்லை என்று தெரியவில்லை. என்னிடம் கையெழுத்து கேட்டார்கள், நான் கையெழுத்து செய்து கொடுத்தேன். நான் அவ்வாறு உண்மையில் கடன் பெற்றிருந்தால் சாட்சிகளும் மேற்படி ஆவணத்தில் கையெழுத்து செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. கடன்

தொகையை திருப்பி செலுத்திய பிறகுதான் ஆவணத்தை ரத்து செய்வார்கள் என்றால் சரி. ஆனால் நான் கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை. ஆனால் 1ம் வாதி அசல் தொகைக்காக காட்டை எழுதிக்கொண்டார். அதே மாதிரி பி.சா.ஆ.4 ஆவணத்தை நான் எனது வாரிசுகளை உட்படுத்தி பத்திர அலுவலகத்தில் ஒரு ஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாரிசுகளை உட்படுத்தி ஆவணம் எதுவும் எழுதிகொடுக்கவில்லை.

பி.சா.ஆ4.ல் என் தகப்பனார் நான் என் மனைவி கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரி. பி.சா.ஆ.4 ஆவணத்தில் ரூ.6,00,000/- கிரயம் பேசி ரூ.5,50,000/- முன்தொகை கொடுத்து மீதி தொகை ரூ.50,000/-ஐ 30 மாத வாய்தாவிற்கும் செலுத்தி கிரயம் செய்து கொள்ள வேண்டியது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் நான் மேற்படி ரூ.5,50,000/-தொகையை நான் வாங்கவில்லை. பத்திர பதிவு அலுவலகத்தில் சார் பதிவாளர் நான் கையெழுத்து செய்வதற்கு முனன்ர் நான் முன்பணம் ரூ.5,50,000/- ஐ பெற்றுக்கொண்டேனா என்று கேட்டாரா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் ஒவ்வொரு பதிவு அலுவலகத்திலும் ஆவணத்தை பதிவு செய்வதற்கு முன்னர் அதிலுள்ள சரத்துக்கள் பற்றி கேட்கப்படும் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல குறைவான முன்பணத்தை வாதி கொடுத்திருந்தால்

பி.சா.ஆ.4 ஆவணமே எழுதப்பட்டிருக்காது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 ஆவணத்தை ரத்து செய்ததற்கான ஆவணம் பி.சா.ஆ.5 ஆவணம் என்றால் சரி. மேற்படி ஆவணத்திலும் நான் வாங்கிய முன்தொகையை செலுத்தியதால் மேற்படி ஆவணம் ரத்து செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் முன்பணத்தை வாதி திருப்பி கொடுக்கவில்லை. பி.சா.ஆ5 ஆவணம் பதிவு செய்வதற்கு முன்னரும் நான் முன்பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேனா வாதி அதை பெற்றுக்கொண்டாரா என்று என்னிடம் கேட்கப்பட்டுதான் ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் அவ்வாறு எதுவும் கேட்கவில்லை. பி.சா.ஆ.5ல் சாட்சி கையெழுத்து செய்துள்ள சுப்ரமணி யார் என்றால் என்னுடைய மனைவியின் அண்ணன்.

இந்த ஆவணத்தில் சாட்சிகள் முன்னிலையில் முன்பணத்தை ரிட்டன் பெற்றுக்கொண்டு பத்திரத்தை ரத்து செய்வதாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கத் தெரியாது. என்னிடம் கையெழுத்து மட்டும் கேட்பார்கள், நான் கையெழுத்து செய்து கொடுப்பேன். எனக்கு படிக்கத்தெரியும் என்றால் சரி. நான் ஆவணத்தை படித்துப்பார்த்துதான் கையெபத்து செய்தேன் என்றால் சரி. மேற்படி ஆவணத்தில்கண்டுள்ள சரத்துக்களை நான் ஒப்புக்கொண்டுதான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரி.

ஆனால் வாதி அசல் தொகை ரூ.1,60,000/- ஐ திருப்பி கொடுத்த உடன் கிரய ஒப்பந்தத்தை ரத்துசெய்து விடுவேன், உன்னை ஏமாற்ற மாட்டேன் என்று சொன்னதால் கையெழுத்து செய்து கொடுத்தேன். பி.சா.ஆ.5 ஆவணத்தில் 2வது சாட்சி கையெழுத்து செய்துள்ளவர் 1ம் வாதியின் மகனான 4ம் பிரதிவாதி என்றால் சரி. பி.சாஆ.4 மற்றும் பி.சா.ஆ.5 ஆவணங்களை என்னை ஏமாற்றி ரூ.1,60,000/- அசலுக்காக ரூ.5,50,000/- என்று போட்டு எழுதிக்கொண்டது சம்மந்தமாக நான் காவல்நிலையத்திலோ, உரிய சார் பதிவாளர் அலுவலகத்திலோ இன்றுவரை எந்த புகாரும் அளிக்கவில்லை என்றால் என்னை ஏமாற்றவில்லை. ஏமாற்றியிருந்தால் நான் புகார் அளித்திருப்பேன்.

1ம் வாதி நியாயஸ்தன், நேர்மையாக நடந்து கொள்வார் என்றால் சரி. நான் நிலத்திற்கு அதிக தொகை கேட்டதால் பி.சா.ஆ5 ஆவணத்தை ரத்து செய்துவிட்டு வா.சா.ஆ.1 எழுதப்பட்டது என்றால் சரியல்ல. நான் அதிக தொகை கேட்கவில்லை, காலம் முடிந்துவிட்டது என்பதால் மீண்டும் எழுதி கொடுக்க கேட்டார். வா.சா.ஆ.1ல் நான் முன்தொகை ரூ.9,50,000/- யில் ரூ.9,00,000 பெற்றுக்கொண்டு மீதி ரூ.50,000/- ஐ 30 மாத வாய்தாவிற்குள் பெற்றுக்கொண்டு கிரயம் செய்வதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் அவ்வளவு தொகை பெறவில்லை. ரூ.1,60,000/-க்காகதான் மேற்படி நிலத்தை

எழுதி கொடுத்தேன். மேற்படி பத்திரம் எழுதியபோது அதிக தொகை போட்டுள்ளீர்கள், அதனால் நான் கையெழுத்து போட மாட்டேன் என்று கூறினேனா என்றால் இல்லை. இந்த ஆவணத்திலும் வாதியின் மூத்த மகன் அண்ணாதுரை மற்றும் எனது மைத்துனர் ஆகியோர் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரி. இந்த ஆவணத்தையும் சார் பதிவாளர் என்னிடம் கேட்டுதான் பதிவு செய்தார் என்றால் சரி. ஆனால் எனக்கும் வாதிக்கு மட்டும்தான் உரிய தொகை என்ன என்று தெரியும். எனவேதான் வாதி ரூ.9,50,000/- விலைக்கு பேசி ரூ.9,00,000/- முன்பணம் பெற்றுக்கொண்டு மீதி பாக்கிதொகையை பெற்றுக்கொண்டு கிரயம் செய்து கொடுக்கசொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

கொரோனா காலத்தில் என்னால் வட்டி செலுத்த முடியவில்லை. அதனால் ரூ.40,000 பாக்கி ஆகிவிட்டது. அதனால் வாதி ரூ.2,00,000/- கொடுத்துவிட்டு கிரய ஒப்பந்த பத்திரத்தை ரத்துசெய்யுமாறு கூறினார். ஆனால் என்னால் பணம் செலுத்த முடியவில்லை. எனவேதான் அவர் அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்டு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் அறிவிப்பு கொடுத்தேன். அந்த பதில் அறிவிப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. நான் வழக்கு நிலுவையில் உள்ளபோது 1ம் வாதியை சந்தித்து முன்பணத்தை திருப்பி செலுத்தி ஆவணத்தை ரத்து செய்து

கொடுக்கிறேன் என்று நான் சொல்லவில்லை என்றால் சரி. வழக்கு தாக்கல் செய்தபின்னர் நான் அவரை பார்க்கவில்லை. தற்போது நான் வா.சா.ஆ.1 படி முன்பணத்தை வட்டியுடன் திருப்பி செலுத்தி ஆவணத்தை திருப்பி செலுத்த தயாராக உள்ளேன் என்றால் சரியல்ல. வாதி இறந்தபின்னர் முன்பணத்தையும் வட்டியையும் ஏமாற்ற வேண்டி எதிர் வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. 4,5 பிரதிவாதிகளை பொறுத்த வரை முன்பணத்தை உரிய வட்டியுடன் செலுத்தினால் பெற்றுக்கொள்ள தயாராக இருக்கிறார்கள் என்றால் நான் முன்பணமே வாங்கவில்லை. வா.சா.ஆ.1க்கு உண்டான கிரய முன்தொகையை நான் பெறாமல் இருந்திருந்தால் பதிவாளர் பதிவு அலுவலகத்தில் ஆவணத்தை பதிவு செய்திருக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. சார் பதிவாளருக்கு கடனுக்காகதான் ஆவணம் எழுதப்பட்டது என்று தெரியும். சார் பதிவாளரை சாட்சியாக விசாரிக்க இருக்கிறேனா என்றால் இல்லை. சார் பதிவாளரை விசாரித்தால் ஆவணம் கிரயத்திற்காகதான் எழுதப்பட்டது என்பது தெரிந்துவிடும் என்பதால்தான் அவரை என் தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/–S.Sumathy,

Principal District Judge, Salem.